**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**STC No. 305/2023**

Deposition of the witness for Prosecution **PW** 1
Name : ராமதாஸ்

Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (09.10.2025)

Accused absent, petition filed and allowed.

<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்</u>

எதிரி முகமது நவாசுக்கு எப்போது திருமணம் நடந்தது, எத்தனை குழந்தைகள் உள்ளது என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பையனை பார்த்துள்ளேன். அவரது வீட்டிற்கு நான் பலமுறை சென்று இருப்பதால் பையனை பார்த்துள்ளேன். எங்களது வீட்டு குடும்ப நிகழ்ச்சிக்கு எதிரியை அழைத்ததுண்டா, அவர் கலந்து கொண்டாரா என்றால் இல்லை. நான் ராணுவத்திலிருந்து எப்போது ஓய்வு பெற்றேன் என்றால் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஓய்வு பெற்றேன். ராணுவத்திலிருந்து நான் ஓய்வு பெறும்பொழுது எனக்கு எவ்வளவு தொகை கொடுத்தார்கள் என்றால் ரூ.68,00,104/- (அறுபத்து எட்டு லட்சத்து நூற்று நான்கு ரூபாய்).

கதவு எண். 65 நாயுடு தெரு புளியரை என்ற இடத்தில் அமைந்துள்ள வீடு தாங்கள் ஓய்வு பெற்ற பின்பு கட்டப்பட்ட புதிய புதிய வீடு என்றால் இல்லை. அது பழைய வீடு, பூர்வீக சொத்தாகும். ஓய்வு பெற்ற பின்பு அந்த வீடு புதுப்பிக்கப்பட்டது என்றால் இல்லை. இந்த வழக்கின் எதிரி எனது நண்பர் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 23.08.2022 அன்று எதிரிக்கு ரூ.10,50,000/- (பத்து லட்சத்து ஐம்பதாயிரம்) கைமாற்றாக கடன் கொடுத்ததாக சொல்லக் கூடிய நேரத்தில் எதிரி பணம் பெற்றதற்காக நான் எந்தவித ஆவணமும் கேட்டு பெறவில்லை

என்றால் ஆவணம் கொடுத்தார். காசோலை வாங்கும்போது ஆவணத்தை திருப்பி பெற்றுக் கொண்டார். அவர் வீட்டு பத்திரத்தை என்னிடம் கொடுத்தார். எதிரி கடன் வாங்கியதாக சொல்லும் போது அவர் என்னிடம் வீட்டு பத்திரத்தை கொடுத்துவிட்டு, காசோலை கொடுக்கும் பொழுது திரும்ப வீட்டு பத்திரத்தை பெற்றுக் கொண்டார் என்ற விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ, முதல் விசாரணை சாட்சியத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன தேதியில் எதிரிக்கு தொகை எதுவும் கொடுக்காதால், வழக்கிற்காக ஆவணம் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. Alteration require drawers authentication என்ற காரணத்திற்காகவும் காசோலை திருப்பப்பட்டது என்றால் சரிதான். நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு அதை என்ன காரணம் என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் இல்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலையில் காணப்பட்டுள்ள கையொப்பத்தைத் தவிர, ஏனைய பாகங்கள் இந்த வழக்கின் எதிரியால் எழுதப்பட்டவை அல்ல என்றால் சரியல்ல. எதிரி தான் எழுதி தந்தார். காசோலை எண்.10076514 என்ற காசோலை Alteration require drawers authentication என்ற காரணத்திற்காக மதிப்பிழக்கப்பட்டது என்றால் சரிதான். 23.12.2022 அன்று கொடுக்கப்பட்டதாக சொல்லும் காசோலை அதே தேதியில் தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்தி தாங்கள் பணம் பெற முயற்சி செய்தீர்கள் என்றால் சரிதான். அவர் கேட்டுக் கொண்டார், அதன்படி செலுத்தினேன். 23.12.2022-க்கு பின்னர் இரண்டு மாதங்கள் கழித்து வங்கியில் செலுத்தி பணமாக்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னதால், இரண்டு மாதமாக நான் காசோலையை செலுத்தாமல் வைத்திருந்தேன் என்றால் சரியல்ல. முதல் காசோலை கொடுக்கும் பொழுது இரண்டும் ஒரே தேதியில் தான் கொடுத்தார்.

இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள இரண்டு காசோலைகளும் 23.08.2022 ஆம் தேதி எனது கைக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். 23.08.2022 தேதிமுதல் 2 மாதங்கள் காசோலையை வங்கியில் செலுத்த நான் காத்திருந்தேன் என்றால் சரிதான். அதனால் இரண்டு

காசோலைகளையும் நான் 23.10.2022 தேதியில் எனது கணக்கில் செலுத்தி பணம் பெற முயற்சிக்கவில்லை என்றால் சரிதான். ஜனவரி மாதம் தான் செலுத்தினேன். 23.10.2022 தேதியில் இருந்து ஜனவரி மாதம் வரை எனது வங்கிக் கணக்கில் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு காசோலைகளும் நான் செலுத்தி பணம் பெற வேண்டாம் என அறிவுரை எனக்கு வழங்கப்பட்டதா என்றால் அவர் கேட்டுக் கொண்டதால் தாக்கல் செய்யவில்லை. 23.10.2022 தேதிமுதல் ஜனவரி வரை அவர் கேட்டுக் கொண்டதால் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலைகளை எனது வங்கிக் கணக்கில் செலுத்தி பணம் பெறாமல் காத்திருந்தேன் என்று வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ, முதல் விசாரணை காட்சியத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் தேதியை குறிப்பிட்டு சொல்லவில்லை, எதிரி கேட்டுக் கொண்டதால் தாக்கல் செய்யவில்லை என்று சொல்லியுள்ளேன்.

வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலைகள் இரண்டும் எதிரி என்னிடம் நேரடியாக கொடுத்தது இல்லை என்றால் சரியல்ல. நேரடியாக கொடுத்தது தான். மகேந்திரா எக்ஸ்போர்ட் என்ற நிறுவனத்தை வைத்துள்ளவர் எனது நண்பரா என்றால் நண்பராக இருந்தார். வழக்கு எண் 306/2023 குற்றம் சாட்டப்பட்டுள்ள இன்ஷால்பேகம் என்ற பெண்மணிக்கு அவரது வீட்டு திருமணத்திற்கு எனது நண்பர் மகேந்திரன் என்பவர் மூலம் ரூபாய் 10 லட்சம் கடனாக நான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இன்ஷால் பேகத்திற்கு நான் மொத்தம் ரூபாய் 21 லட்சம் கொடுத்துள்ளேன். ரொக்கமாக ரூபாய் 11 லட்சமும், ரூபாய் 10 லட்சம் அவர் வங்கி கணக்கில் வாங்கி உள்ளார். இன்ஷால்பேகம் என்பவரது வங்கி கணக்கிற்கு நான் ரூபாய் 10 லட்சம் அனுப்பியதற்கு காட்டக்கூடிய ஆவணம் என் கைவசம் உள்ளது என்றால் உள்ளது. அந்த ஆவணத்தின் நகலை வழக்கு எண். 306/2023 வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் பத்து லட்சம் ரூபாயை இன்ஷால் பேகத்திற்கு கொடுப்பதற்காக மகேந்திரன் என்பவரிடம் ரொக்கமாக கொடுத்து, அந்த பணத்தை மகேந்திரன் தனது வங்கி கணக்கு மூலம் இன்ஷால்பேகத்திற்கு அனுப்பி வைத்தார் என்றால் இல்லை. எனது வங்கி கணக்கில்

இருந்துதான் நான் இன்ஷால்பேகத்திற்கு அனுப்பி உள்ளேன்.

இன்ஷால்பேகம் குடும்பத்தில் அவரது வாரிசுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்று எனக்கு தெரியுமா என்றால் நான் பணம் கொடுத்த அந்த மாதத்தில் தான் திருமணம் நடைபெற்றது. 01.03.2020 தேதிக்கு பிறகு. அந்த திருமணத்திற்கு எனக்கு அழைப்பு கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் மகேந்திரன் மூலம் கொடுத்த ரூபாய் 10 லட்சத்தை, ரூபாய் 5 லட்சத்தை இன்ஷால்பேகத்தினுடைய உறவினர் ரம்ஜான் பேகம் என்பவர் எனது வங்கிக் கணக்கிற்கு 26.03.2020 அன்று கடன் தொகையை திருப்பி செலுத்தும் பொறுப்பு எனக்கு வங்கியில் அனுப்பி இருந்தார் என்றால் இல்லை. அனுப்பவில்லை. மீதமுள்ள கடன் தொகையினை இந்த வழக்கின் எதிரி இன்ஷால்பேகம் சார்பாக நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் 24.01.2025-க்குள் ரூபாய் 5,25,000/- (ஐந்தே கால் லட்சம்) செலுத்தினார் என்றால் இல்லை. முகமது நவாஸுக்கு நான் கொடுத்த பணத்தை தான் அவர் திருப்பித் தந்தார்.

வழக்கு எண்கள் 304, 305, 306 ஆகியவைகளில் நான் தாக்கல் செய்துள்ள காசோலைகள் அனைத்தும் இன்ஷால்பேகத்திற்கு மகேந்திரன் மூலமாக கடன் கொடுத்த போது வழங்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் நேரடியாக பணம் கொடுத்தேன். அந்த காசோலைகள் அனைத்தையும் நான் பயன்படுத்தி மூன்று தனித்தனி வழக்குகளாக இன்ஷால்பேகம், தர்வீஸ் மைதீன் மற்றும் முகமது நவாஸ் ஆகியோர்கள் மீது அதிக பணம் பெற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தின்பேரில் பொய்யான தகவலின் பெயரில் வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்டுள்ள காசோலையின் அடிப்படையில் எதிரி எனக்கு சட்டப்படி கடன் பெறுவது தொகை எதுவும் செலுத்த வேண்டியது இல்லை என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டு தான் பணத்தை கொடுத்துள்ளார். நான் உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை மீண்டும் அழைத்து விசாரணை செய்வதற்காக தாக்கல் செய்த மனுவில் எனது தகவலின் பேரில் எதிர்உரை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.10.09 16:01:19 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai